உ

சிவமயம்

அமாவாஸ்யா

# திலோதக தருப்பண விதி,

## தீர்த்த சங்கற்பம்,

## பிரதோஷவிரத அர்க்கியம்.

இவை

சைவசமயிகள் யாவருக்தும்

எளிதின் உபயோகமாதற்பொருட்டு

யாழ்ப்பாணம் கொக்குவில்

இ. சி. இரகுநாதையரால்

சோதிடப்பிரகாச யந்திரசாலையில்

அச்சிற்பதிப்பிக்கப்பட்டன.

6-ம் பதிப்பு.

சுபகிருது௵

1962.

விலை சதம் 10.

உ

சிவமயம்

அமாவாஸ்யா

# திலோதக தருப்பணவிதி

ஐந்து தருப்பைகளைச் சமநுனியுடையனவாக அடுக்கி, நுனி நாலங்குலமும், முடிச்சு இரண்டங்குலமும், அடி எட்டங்குலமுமாகக் கூர்ச்சம் முடிந்துகொள்க. மூன்று தருப்பையினாலே பவித்திரம் முடிந்துகொள்க.

வடக்கேனுங் கிழக்கேனும் நோக்கியிருந்து, பவித்திரத்தை வலக்கையணிவிரலிலிட்டு, அதனோடு மூன்று தருப்பைக்கட்டைகளை மாட்டிப் பிடித்து, எள்ளைத்தொட்டு, ஓம் கணபதயேநம என்று குட்டி, ஓம் ஸ்ரீவகுரவேநம என்று கும்பிட்டுக்கொள்க.

## விபரீதப் பிராணுயாமம்

ஓம் ஸத்தியோஜாதமூர்த்தயேநம, ஓம் வாமதேவகுஹ்யாயநம, ஓம் அகோரஹிருதயாயநம, ஓம் தத்புருஷவக்திராயநம, ஓம் ஈஸானமூர்த்தாயநம, ஓம் ஹிருதயாயநம, ஓம் ஸிரசேநம, ஓம் ஸிகாயைநம, ஓம் கவசாயநம, ஓம் நேத்திரேப்பியோநம, ஓம் அஸ்திராயநம என்று மூன்று முறை பிராணுயாமஞ் செய்க.

## சங்கற்பம்

எள்ளுங் கட்டைப்புல்லுஞ் சேர்த்து, வலதுகை மேலாக இரண்டு கைகளையும் பொத்தி வலதுமுழந்தாளில் வைத்துக்கொண்டு, ஓம் ஸிவாயநம ஸிவசம்போராஜ்ஞயா பிரவர்த்தமானஸ்ய ஆத்யப்ரம்மணோ துவிதீயபரார்த்தே ஸ்வேதவராஹகல்பே வைவஸ்வதமன்வந்தரே அஷ்டாவிம்ஸதிதமேசதுர்யுகே கலியுகே பிரதமபாதே ஜம்பூத்வீபே பாரதவர்ஷே பரதக்கண்டே மேரோர்த்தக்ஷிணபார்ஸவே சகாப்தே அஸ்மின் வர்த்தமானே வியவகாரிகே பிரபவாதி ஷஷ்டிஸம்வத்ஸராணாமத்தியே (இன்னபேருடைய) வருடத்திலே (இன்ன) அயனத்திலே (இன்ன) இருதுவிலே (இன்ன) மாதத்திலே (இன்ன) பக்ஷத்திலே வருகிற அமாவாஸ்யாயாம் புண்ணிய திதௌ (இன்ன) வாசரயுக்தாயாம் (இன்ன) நக்ஷத்ரயுக்தாயாம் சிவயோக சிவகரண ஏவங்குண விசேஷேண விஸிஷ்டாயாம் அஸ்யாம் அமாவாஸ்யாயாம் புண்ணியதிதௌ மம விசேஷேண சிவகோத்ராணாம், ஸ்கந்த சண்ட கணேசஸ்வரூபாணாம், பிதிர் பிதாமஹப் பிரபிதாமஹாநாம், மாதிரு பிதாமஹீப் பிரபிதாமஹீநாம், மாதாமஹ மாதுப்பிதாமஹ மாதுப்பிரபிதாமஹாநாம், மாதாமஹி மாதுப்பிதாமஹி மாதுப்பிரபிதாமஹீநாம், சர்வேஷாம் உபயவம்ச காருண்ய பிதிரூணாம், அக்ஷய திருப்தியர்த்தம் திலோதகதர்ப்பணம் அஹம் அத்திய கரிஷ்யே என்று சங்கற்பித்துத் தெற்கே எள்ளையும் கட்டைப் புற்களையும் எறிக.

## விபரீத சகளீகரணம்

ஓம் அஸ்திராயபடு என்று இடக்கையினல் வலக்கையின் உள்ளேயும் புறத்தையும் வலக்கையினல் இடக்கையின் உள்ளேயும் புறத்தையுந் துடைத்து, ஓம் சத்தயேவௌஷடு என்று இருகைகளேயுங் கூட்டிக் குவித்து, இரண்டு உள்ளங்கைகளிலே இரண்டு பெருவிரல்களினுலும் ஓம் சிவாசனயநம ஓம் சிவமூர்த்தயேநம என்று நியசித்து, பெருவிரல்களினுலே சிறு விரல்களிலே ஓம் சத்தியோஜாதமூர்த்தயேநம என்றும், அணிவிரல்களினுலே ஓம் வாமதேவ குஹ்பாயநம என்றும், நடுவிரல்களினுலே ஓம் அகோர ஹிருதயாயநம என்றும், சுட்டுவிரல் களினுலே ஓம் தத்புருஷவக்திராயநம என்றும், பெருவிரல்களிலே சுட்டுவிரல்களினுலே ஓம் ஈசானமூர்த்தாயநம என்றும் நியசித்து, உள் ளங்கைகளிலே பெருவிரல்களினுலே ஓம் வித்தியாதேஹாயநம என்று நியசித்து, உள்ளங் கைகளிலே சுட்டுவிரல் நடுவிரல் அணிவிரல் களாகிய நடுவிரல்கண் மூன்றினுலும் ஓம் நேத் திரேப்யோநம என்று நியசித்து, உள்ளங் கைகளிலே பெருவிரல்களினுலே ஓம் சிவாயநம என்று நியசித்து, பெருவிரல்களினுலே சிறு விரல்களிலே ஓம் ஹிருதயாயநம என்றும், அணி விரல்களிலே ஓம் சிரசேநம என்றும், நடுவிரல் களிலே ஓம் சிகாயைநம என்றும், சுட்டுவிரல் களிலே ஓம் கவசாயநம என்றும், சுட்டுவிரல் களினுலே பெருவிரல்களிலே ஓம் அஸ்திராயநம என்றும் நியசித்து, கைகளே ஓம் கவசயா

வௌஷடு என்று இடமாக † அவகுண்டனஞ் செய்து, ஓம் சிவாயவௌஷடு என்று இரண்டு கைகளையுங் கூட்டிக் குவித்திடுக. இது கரநியாசம்.

## அங்க நியாசம்

வலதுகையிற் பெருவிரல் அணிவிரல்களினாலே ஹிருதயத்தில் ஓம் சிவாசனாயநம சிவமூர்த்தயேநம என்று நியசித்து, பெருவிரலோடு கூடிய சிறுவிரலினாலே முழந்தாள்களிலே ஓம் ஸத்தியோஜாதமூர்த்தயேநம என்றும், பெருவிரலோடுகூடிய அணிவிரல்களினாலே கொப்பூழிலே ஓம் வாமதேவகுஹ்யாநம என்றும், பெருவிரலோடுகூடிய நடுவிரலினாலே ஹிருதயத்திலே ஓம் அகோர ஹிருதாயநம என்றும், பெருவிரலோடுகூடிய சுட்டுவிரலினாலே முகத்திலே ஓம் தத்புருஷவக்திராயநம என்றும், கைப்பொத்தாகிய முட்டியுடனேகூடிய பெருவிரலினாலே தலையிலே ஓம் ஈசானமூர்த்தாயநம என்றும் நியசித்து, பெருவிரல் அணிவிரல்களினாலே ஹிருதயத்தில் ஓம் வித்யாதேஹாயநம என்றும் நியசித்து, நடுவிரல் மூன்றினாலும் வலமிடம் நெற்றிக்கண்களிலே ஓம் நேத்திரேப்பியோநம என்று நியசித்து, பெருவிரல் அணிவிரல்களினாலே ஹிருதயத்திலே ஓம் சிவாயநம என்று நியசித்து, பெருவிரலோடுகூடிய சிறுவிரலினாலே இருதயத்திலே ஓம் ஹிருதயாயநம என்றும், பெருவிரலோடுகூடிய அணிவிரலினாலே ஓம் சிரசேநம என்றும், பெருவிரலோடுகூடிய நடுவிரலினாலே குடுமியிலே ஓம் சிகாயைநம

† அவகுண்டனம் — சுற்றுதல்.

என்றும் நியசித்து, சுட்டுவிரல்களினுலே கழுத்தை மூலைநடுவௗவாக ஓம் கவசாயவௌஷடு என்று சுற்றி வலவுள்ளங்கையிலே இடக்கையணிவிரலினுலும், இடவுள்ளங்கையிலே வலக்கையணிவிரலினுலும் ஓம் அஸ்திராயபடு என்று நியசித்து, வலக்கைப் பெருவிரலொழிந்த விரல்களால் இடவுள்ளங்கையிலே ஓம் அஸ்திராயபடு என்று மூன்றுதரம் தட்டுதலாகிய தாளத்திரயஞ்செய்து, சோடிகாமுத்திரையினுலே ஓம் அஸ்திராயபடு என்று இடமாகத் திக்குப்பந்தனஞ்செய்து. சுட்டுவிரனீட்டிய கையினுலே ஓம் கவசாயவௌஷடு என்று இடமாக அவகுண்டனஞ்செய்து, ஓம் சிவாயவௌஷடு என்று மஹாமுத்திரை காட்டுக. இது அங்கநியாசம்.

கிழே மூன்று தருப்பைக்கட்டைகளை இட்டு அவைகளின் மேலே கூர்ச்சத்தைத் தெற்கு நுனியாக வைத்து, இடமுழந்தாளூன்றிநின்று, இரண்டு கைகளையுங் கூட்டி மேலே விரித்து அஞ்சலியாக்கி, சமநுனியுடையனவாகிய மூன்று தருப்பைகளை அவைகளினடியினுலும் நுனியினுலுந் தருப்பிக்கும்படி குறுக்காக்கி இரண்டு பெருவிரல்களினும் மாட்டிப் பிடித்துக்கொண்டு, சலபும் எள்ளுமிட்டு, வலக்கைப் பெருவிரல் சுட்டுவிரல்களின் அடியினுலே கூர்ச்சத்தினது அடிமுதல் நுனிவரையும் ஓம் வாமதேவாயநம பிதிருநாவாஹயாமி என்று ஆவாஹனஞ்செய்து, ஓம் கந்தாய பிதிரேசுவதா ஓம் சண்டாய பிதாமஹாய சுவதா ஓம்கணுதீசாய பிரபிதாமஹாயசுவதா,

ஓம் கந்தாயை மாதிரேசுவதா ஓம் சண்டாயை பிதாமகியைசுவதா ஓம் கணாதீசாயை பிரபிதாமகியைசுவதா, ஓம் கந்தாய மாதாமகாயசுவதா ஓம் சண்டாய மாதுபிதாமகாயசுவதா ஓம் கணாதீசாய மாதுபிரபிதாமகாயசுவதா, ஓம் கந்தாயை மாதாமகியைசுவதா ஓம் சண்டாயை மாதுபிதாமகியைசுவதா ஓம் கணாதீசாயை மாதுபிரபிதாமகியை சுவதா, ஓம் சர்வேப்பிய ஆசாரேப்பியசுவதா என்று ஒவ்வொரு மந்திரத் தினாலே மும்மூன்றுதரங் கைநிறைந்த சலமும் எள்ளுங்கொண்டு தருப்பணஞ்செய்து, கொஞ்சம் எள்ளெடுத்து அந்தக் கூர்ச்சத்திலே அருச் சித்துப் பிதிர்களே இரக்ஷிக்கக்கடவீர்கள் என்று நமஸ்கரித்துக் கூர்ச்சத்தினது முடிச்சை அவிழ்த் துவிட்டு, அதில் விழுந்த எள்ளிலே சிலவற்றை எடுத்து முகந்து பின்பக்கத்தில் எறிந்துவிட்டுக் கால்களைக் கழுவி, ஆசமனஞ்செய்து, விபூதிதரித் துக் குட்டிக் கும்பிட்டு மூன்று பிராணாயாமஞ் செய்து, அகோரமந்திரத்தை இருபத்தொரு தரஞ்செபித்து, முன்போலக் குட்டிக் கும்பிட்டு, மூன்று பிராணாயாமமுஞ் சகளீகரணமுஞ்செய்க.

திலோதக தர்ப்பண விதி முற்றிற்று.

# தீர்த்த சங்கற்பம்

[சமஸ்கிருத எழுத்துணர்ச்சியில்லாதவர், தீர்த்தமாடுவதன் முன் சொல்லும் பொருட்டுச் சுருக்கி எழுதப்பட்டது.]

சுக்லாம் பரதரம் விஷ்ணுஞ் சசிவர்ணஞ் சதுர்ப்புஜம் பிரசன்ன வதனந் தியாயேத் சர்வ விக்கினோப சாந்தயே என்று குட்டிக் குட்டிப் பவித்திரமிட்டுப் பிராணாயாம சகளீகரணஞ் செய்து, கட்டைப்புல் விடுக்கி வலது முழந்தாளில் கையைப் பொத்தி வைத்துக்கொண்டு,

ஓம் சிவாயநம சிவசம்போராஜ்ஞயா பிரவர்த்தமானஸ்ய ஆத்யப்ரம்மணோ துவிதீய பரார்த்தே சுவேதவராஹகல்பே வைவஸ்வத மன்வந்தரே அஷ்டாவிம்சதிதமே சதுர்யுகே கலியுகே பிரதமபாதே ஜம்பூத்வீபே பாரத வர்ஷே பரதக்கண்டே மேரோர்த்தக்ஷிண பார்சுவே சகாப்தே அஸ்மின் வர்த்தமானே வியவஹாரிகே பிரபவாதிஷஷ்டிஸம்வத்ஸராணமத்யே (இன்ன) வருடத்திலே (இன்ன) அயனத்திலே (இன்ன) இருதுவிலே(இன்ன) மாசத்திலே (இன்ன) பக்ஷத்திலே (இன்ன) திதியிலே (இன்ன) வாரத்திலே (இன்ன) கரணத்திலே (இன்ன) யோகத்திலே ஏவங்குண விசேஷேண விஸிஷ்டாயாம் அஸ்யாம் வர்த்தமானாயாஞ் சுபதிதௌ, அஸ்மாகம்

ஸஹகுடும்பானாம் க்ஷேமஸ்தைர்ய வீர்ய விஜய ஆயுராரோக்கிய ஐஸ்வர்யாபி விர்த்தி யர்த்தம், சமஸ்த துரிதோபசாந்தியர்த்தம், சமஸ்த மங்களாவாப்த்யர்த்தம், தர்மார்த்த காம்யமோக்ஷ சதுர்விதபல புருஷார்த்த சித்யர்த்தம், ஆயுஷ்ம சிற்ஜீவ சத்சந்தான சமர்த்யர்த்தம், ஆதித்தியாதீநாம் நவானாம் கிரகாணாம் ஆநுகூல்ய சித்தியர்த்தம், மனோ புத்தி சித்த அஹங்கார அந்தக்கரண தோஷ பரிகாரார்த்தம், சுரோத்திரத் துவக் சட்சு சிங்கு வாக்கிராண ஞானேந்திரிய வியாபாரதோஷ பரிகாரார்த்தம், வாக்கு பாத பாணி பாயுரு உபஸ்த கர்மேந்திரிய வியாபாரதோஷ பரிகாரார்த்தம், சர்வாபீஷ்ட சித்தியர்த்தம், சமஸ்தபாப க்ஷயார்த்தம், இஹஜன்மனீ பூருவஜன்மனீ ஜன்ம ஜன்மாந்தரதோஷ பரிகாரார்த்தம், (இன்ன) பாபம் நீங்கும் பொருட்டும் (இன்ன) சித்தி கிடைக்கும் பொருட்டும் (இன்ன) தீர்த்தத்திலே அஹம் ஸ்நானம் அத்தியகரிஷ்யே என்று சங்கற்பித்து, வடக்கே எறிந்து, எழுந்து பிரதக்ஷிணஞ்செய்து, விழுந்து நமஸ்கரித்து, சமுத்திரமாயின் பிப்பலாதிகளை நினைத்து, ஏழு கற்களையிட்டும், சுத்த சலமாயின் ஒருபிடி அல்லது ஏழுபிடி மண்ணைவாரி வெளியிலேயிட்டுஞ் சிவதீர்த்தமாகப் பாவித்து ஸ்நானஞ்செய்க.

தீர்த்த சங்கற்பம் முற்றிற்று.

---

# பிரதோஷவிரத அர்க்கியம்

கிரீச கிரிஜாகாந்த
கங்காதர குஹப்ரிய
ப்ரதோஷார்க்யம் மயாதத்தம்
க்ரஹாண பரமேசுர ॥

கிரீசரே, பார்வதிநாயகரே, கங்கையைத் திருமுடியிலே தரித்தவரே, சுப்பிரமணியராகிய திருக்குமாரர்மேற் பிரீதியுடையவரே, பரமேசுரரே, என்னாற்கொடுக்கப்பட்ட பிரதோஷ அர்க்கியத்தை ஏற்றருளுக.

ஓம் ஸ்ரீஸாம்பஸிவாயநம: இதம் அர்க்யம் ஸமர்ப்பயாமி.

சஸ்தேப்ரதோஷே தேவேச
பாபாகி ஹாரசங்கர
அர்க்கியம் க்ரஹாணபகவந்
அபீஷ்ட வரதோபவ ॥

தேவநாதரே, சுகத்தைச் செய்பவரே, பகவானே, விசிட்டமான பிரதோஷகாலத்திலே (என்னாற் கொடுக்கப்பட்ட) அர்க்கியத்தை ஏற்றருளுக. என் பாவங்களைத் தீர்த்தருளுக. என்னால் விரும்பப்பட்ட வரங்களைத் தந்தருளுக.

ஓம் ஸ்ரீஸாம்பஸிவாயநம: இதம் அர்க்யம் ஸமர்ப்பயாமி.

மமாரிஷ்ட நிவிர்த்யர்த்தம்
அபீஷ்டபல ஸித்தயே
ப்ரதோஷார்க்யம் மயாதத்தம்
க்ரஹாண பரமேஸ்வர ॥

பரமேசுரரே, என் தீமை தீரவும், விரும்பிய பலன்கள் சித்திக்கவும், என்னால் கொடுக்கப் பட்ட பிரதோஷ அர்க்கியத்தை ஏற்றருளுக.

ஓம் ஸ்ரீஸாம்பஸிவாயநம: இதம் அர்க்யம் ஸமர்ப்பயாமி.

ருணரோககாரி தாரித்ரிய
தக்தோஹம் பார்வதிப்ரிய
ததாம்யர்க்யம் மஹாதேவ
ஸாயுஜ்யம் தேஹிமேப்ரபோ ॥

பார்வதிதேவி நாயகரே, மஹாதேவரே, பிரபுவே, (யான்) கடன் நோய் பகை வறுமை என்னும் இவற்றாலே தகிக்கப்பட்டேன். (தேவரீருக்குப்) பிரதோஷ அர்க்கியம் கொடுக்கிறேன். (மேற்குறிக்கப்பட்ட கடன் முதலிய குறைகளை நீக்கி இகசுகந் தந்தருளுதலேயன்றிச்) சாயுச்சிய பரசுகத்தையும் தந்தருளுக.

ஓம் ஸ்ரீஸாம்பஸிவாயநம: இதம் அர்க்யம் ஸமர்ப்பயாமி.

இப்படி அர்க்கியம் கொடுத்து, இஷ்டசித்திகளைப் பிரார்த்தித்துக்கொள்க.

பிரதோஷவிரத அர்க்கியம் முற்றிற்று.

———